**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்</u>**.110/2013

பெயர்–திருமதி.தேன்மொழி நாள்.09.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 2, 8, 9, 11 முதல் 13 வரை உள்ள பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனது கணவர் பெயரில் உள்ள பட்டா மாறுதல் உத்தரவை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. 15.04.2013 புகார் மனு கொடுத்த 4 நாட்கள் கழித்து 19.04.2013ல் மேற்படி செட்டில் மெண்ட் ஆவணம் மோசடியாக தயார் செய்யப்ட்டது என எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் நான் எனது மாமனார் ஆட்டோவில் செல்வதை வைத்து தெரிந்து கொண்டேன், அவரை பின்தொடர்ந்து சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் சென்றேன். மேற்படி ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டதை என்பதை காட்ட நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனது மச்சான் சேகரிடம் கூறினேன் அவர் 15 நாட்கள் கழித்து வந்ததால் தான் மனு செய்ய முடியும் என் கூறியதால் நான் சென்று விட்டேன் மேற்படி விவரத்தை வழக்குரையில் கூறியுள்ளேன். 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விவரம் 2019ல் கடைசியில் தெரிந்து கொண்டேன். எனது கணவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த தேதியில் எனது மாமனாருக்கு சுமார் 80 வயது இருக்கும். 1ம் பிரதிவாதி அவரை பராமரிக்க வேண்டிதான் எனது கணவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. மேலும் தானசெட்டில்மெண்ட் அசலை எனது கணவர் பெற்றுகொள்ளாததாலும் சுவாதீனத்தை எடுத்துக்கொள்ளாததாலும் செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் தான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தார். சுவாதீனத்தை பெற்றுக்கொள்ளாமல் எனது கணவர் இறந்துவிட்டதால் தான் தாவா சொத்தை இரண்டாம் பிரதிவாதி ராஜேந்திரன் பெயருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்ததாக சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சோளம் பயிர் செய்து விவசாயம் செய்து வந்ததற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பெயரிலோ எனது கணவர் பெயரிலோ 2008ல் இருந்து இன்று வரை தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்ததை காட்ட ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் எனது கணவர் பெயரில் உள்ள ஆவணங்கள் என் வசம் உள்ளது. தாவா சொத்து மானாவாரி பூமி என்றால் சரிதான். தாவா சொத்தில் 14ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் இருந்து கிரயம் பெற்று மின் இணைப்பு எண்.3255 மின்சார வாரியத்தில் இருந்து ஆழ்குழாய் கிணறு அமைத்து விவசாயம் செய்து வருகிறார்

என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் ஒரு போதும் அனுபவேத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. 14ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். 14ம் பிரதிவாதி 15ம் பிரதிவாதி சுந்தரி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரையம் செல்லாது என விளம்புகை பரிகாரம் இவ்வழக்கில் கேட்கவில்லை, ஆனால் பத்திர அலுவலகத்தில் செல்லாது என உத்திரவாகிவிட்டது. கடந்த 29.11.2018ல் இந்நீதிமன்றம் எனக்கு ஆதரவாக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்திரவை ஆவண எண்.1352/2019 என பத்திர அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேனா என்றால் எனக்கு ஆவண என் நியாபகம் இல்லை. மேற்படி நீதிமன்ற உத்திரவை பதிவு செய்ய நீதிமன்றத்தில் மனு செய்தேனா என்றால் இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட பொதுவில் 1/4 பங்கான பு.ஏ.0.34 விஸ்தீரணமுள்ள பூமியை 03.04.2019ம் தேதியில் ஆவண எண்.1842/2019ன் படி விக்டர் சாமுவேல் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தேனா என்றால் ஆமாம். ஆனால் அசல் ஆவணம் என் வசம் உள்ளது. மேற்படி விக்டர் சாமுவேலுக்கு கிரையம் செய்து கொடுத்த விபரத்தை வழக்குரையில் குறிப்பிட்டேனா என்றால் இல்லை. எனது மகள் பிருந்தா அவருக்கு பாத்தியப்பட்ட 1/4 பாகத்தை 31.01.2022 தேதியில் ஆவண எண்.698/2022 மூலம் கணேசன் என்பருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். மேற்படி விபரத்தை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்தை பொறுத்து 14ம் பிரதிவாதி வந்து தான் விவசாயம் செய்து வருகிறார் என்றாலும், அவருக்கு எதிராக சுவாதீனம் பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனம் என் வசம் இல்லை என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற நபர்களின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல. இதற்கு மேல் சுவாதீன பரிகாரம் கேட்க கால வரையறை சட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும் 16ம் பிரதிவாதி பிருந்தா எங்களது பங்கை விற்பனை செய்துவிட்டதால் இந்த வழக்கை நடத்த எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றாலும் சரியல்ல. 06.05.2013ம் தேதியில் நான் விவசாயம் செய்து கொண்டிருந்த போது பிரதிவாதிகள் தகராறு செய்ததாக வழக்குரயில் குறிப்பிட்டிருந்தால் உண்மையல்ல. அவ்வாறு தகராறு நடக்கவில்லை. 19.05.2013ல் தகராறு நடந்ததாக வழக்குரையில் குறிப்பிட்டிருந்தால் உண்மையல்ல,. அவ்வாறு தகராறு ஏதும் நடக்கவில்லை. எனது கணவர் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வராததாலும் தாவா சொத்தின் சுவாதீனம் 1ம் பிரதிவாதி வசம் இருந்தது என்பதாலும் எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எவ்வித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்திருந்தால் மேற்படி 2008ல் எனது கணவர் அன்பழகன் பெயரில் எழுதப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லக்கூடியது என்று வளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும்உண்மையில் சுவாதீனம் இல்லாததால் தான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

வழக்கில் தேவையில்லாத தரப்பினர்களாக 3 முதல் 13 பிரதிவாதிகள் வரை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் என் மாமனாரின் வாரிசுகள் ஆவார். 3 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கேட்காததால் அவர்கள் அவசியமற்ற தரப்பினர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக வரதம்பாளையம் கிராமத்தில் தான் பிரச்சினை ஏற்பட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சிக்கரசம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் வசிப்பது வரதாம்பாளையத்தில். சிக்கரசம்பாளையத்தில் பிரச்சினை ஏற்பட்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், தாவா சொத்துக்களை பொறுத்து எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 14 மற்றும் 15 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை பொறுத்து முறையாக மதிப்பீடு செய்யாததாலும் சுவாதீன பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கேட்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆவண எண்,5 முதல் 11 வரை உள்ள ஆவணங்கள் தாவா சொத்துக்கு சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனவே அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.09 15:47:25 +0530

District Munsif